திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எடை போடும் கற்களை வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. அந்த வருடத்திற்கு ஒரு முறை என்பதும், குறிப்பிட்ட ஒரு சமயத்தில் புதுப்பிக்கப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, அங்கேயுள்ள ஊழியர்கள் குறைவாக இருக்கிற காரணத்தால் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் வருடத்திற்கு ஒரு முறை என்பதை இந்த தேதியிலிருந்து இந்த தேதி வரை என்று குறிப்பிட்டு மாற்றுவதற்கு அரசு உத்திரவு விடுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடைகளை ஒரு மாதத்தில் புதுப்பிக்க வேண்டும் என்பது நடைமுறையில் கண்டிப்பாக இயலாத காரியம் என்று அரசு உணருகிற காரணத்தால், வர இருக்கின்ற சட்டத் திருத்தத்திலே இதற்கும் தக்க மாற்றங்கள் கொண்டு வர அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

மதுராந்தகம் வட்டம் சீவாடி கூட்டுறவு சங்க கட்டிடம்.

*வினா எண். 195—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் சீவாடி கூட்டுறவு சங்க கட்டிடம் பயன்படுத்தப்படாமல் அதன் அலுவலகம் வேறு இடத்தில் செயல்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில் சங்க கட்டிடத்திலேயே அதன் அலுவலகம் இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) சங்க கிடங்கு கட்டிடத்திலேயே அலுவலகம் இயங்க இயலாது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்க கிடங்குக் கட்டிடத்திலேயே அலுவலகம் இயங்க இயலாது என்று மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தற்போது இயங்குகிற அலுவலகம் மிராசுதார்கள் இருக்கின்ற பகுதியில் இருப்பதால் சாதாரண ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே சென்று அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களைப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் அந்த அலுவலகத்தை வேறு இடத்தில் மாற்றியமைப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

1983, பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தற்போது கிராம அங்காடியாக இருந்தாலும் சரி, அல்லது வேறு அங்காடியாக இருந்தாலும் சரி, அது பஞ்சாயத்து கட்டடத்திலே இயங்குகிறது. சீவாடி கிராமத்தில் உள்ள பஞ்சாயத்துக்குச் சொந்தமான இடத்தில் அந்த அங்காடி இயங்குவதால், தாழ்த்தப் பட்ட மக்கள், அந்தப் பகுதிக்குச் சென்று பொருள்கள் வாங்க முடியாத அளவிற்கு சிரமம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குறையைப் போக்க அதனுடைய கிளை ஒன்றை அந்தப் பகுதியில் அமைக்க அரசு முயற்சிக்கும்.

சென்னை பிராட்வேயிலுள்ள வெளியூர் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம்.

*வினா எண். 196—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பிராட்வே வெளியூர் பேருந்து நிலையத்தை வேறிடத்திற்கு மாற்றி விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆம். சென்னை பிராட்வேயில் உள்ள வெளியூர் பேருந்து நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றி, தற்போதுள்ள இடத்தில் நகர் பேருந்து நிலையம் மற்றும் கடைவீதியாக மாற்றும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்து நிலையம் வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கான செயற்குறிப்பு உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த பேருந்து நிலையம் மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே மாற்றுகின்ற வரையில் அதை நல்ல முறையில் கவனிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி கவனிக்கலாம்.

பெரியகுளம் நகரில் அரசு ஊழியர்களுக்கென வீடு கட்டும் திட்டம்.

*வினா எண். 197—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் நகரில் அரசு ஊழியர்களுக்கென வீடு கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?